1996 ஆகஸ்ட் 22]

குளிரூட்டும் நிலையம் அமைக்கப் பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா என் 217, திரு. கு. மனோகரன், மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

217—

துணை வேலை வாய்ப்பு அலுவலகம் நிறுவுதல்

***1270—திரு. கு. மனோகரன்:**

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டம், தருமபுரியில் ஒரு துணை வேலை வாய்ப்பு அலுவலகம் நிறுவ அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

தர்மபுரி மாவட்டம், தர்மபுரியில் ஒரு துணை வேலை வாய்ப்பு அலுவலகம் நிறுவுவதற்கான கருத்துரு ஏதும் தற்போதைக்கு அரசின் பரிசீலனையில் இல்லை.

திரு. கு. மனோகரன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தர்மபுரி நகரம், மாவட்டத்தினுடைய தலை நகரமாகும். தர்மபுரி தொகுதியை ஒட்டியுள்ள மொரப்பூர், அரூர், பெண்ணாகரம், பாலக்கோடு ஆகிய பகுதிகளில் உள்ள மாணவர்கள்கூட கிருஷ்ணகிரியில் உள்ள வேலைவாய்ப்பு அலுவலகத்திற்குச் சென்றுதான் பதிவு செய்ய வேண்டியுள்ளது. மாணவர்களின் நலனைக் கருத்திற்கொண்டு, அவர்களின் நீண்டநாள் கோரிக்கையாம் மாவட்டத் தலைநகர் தர்மபுரியில் இந்த ஆண்டில் இல்லாவிட்டாலும், அடுத்த ஆண்டிலாவது துணை வேலைவாய்ப்பு அலுவலகம் ஒன்றை அமைக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாவட்ட வேலைவாய்ப்புத் துணை அலுவலகம் ஒன்று அமைக்க வேண்டுமென்று சொன்னால் அதற்கென்று சில வழிமுறைகள் அரசிலே நிர்ணயம் செய்யப்பட்டிருக்கின்றன. எந்த இடத்திலே மாவட்டத் துணை வேலை வாய்ப்பு அலுவலகம் துவங்குகிறோமோ அங்கே தொழில் நிறுவனங்களும், வேலை வாய்ப்புகளும் இருந்தால்தான் எளிதாக வேலைவாய்ப்பு

அலுவலகத்தோடு தொடர்பு கொள்ள முடியும். இரண்டாவது, மாவட்ட எல்லை பெரிதாக இருந்து, தொலைதூரக் கிராமங்கள் இருக்குமானால் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தோடு தொடர்புகொள்ள முடியவில்லை என்ற நிலை இருக்குமேயானால், இதுபோன்ற கருத்து பரிசீலிக்கப்படலாம். ஆனால் இந்தப் பிரச்சினையைப் பொறுத்தவரையில் கிருஷ்ணகிரியிலும், ஒசூரிலும் வேலைவாய்ப்பு அலுவலகமும், துணை வேலை வாய்ப்பு அலுவலகமும் ஏற்கெனவே இருக்கின்றன. தர்மபுரியில் சுற்றியிருக்கிற பகுதிகளில் இல்லை. இருந்தாலும் உறுப்பினருடைய கோரிக்கை கவனத்தில் கொள்ளப்பட்டு, பரிசீலிக்கப்படும்.

திரு. கு. மனோகரன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தொழிற்சாலைகள் எதுவும் இல்லாத காரணத்தால் தர்மபுரியிலே ஒரு துணை வேலை வாய்ப்பு அலுவலகம் இயக்க வழி இல்லை என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதற்காக, தர்மபுரி மாவட்டத்தின் தலைநகர் தர்மபுரியில் தொழிற்சாலைகளைத் துவங்க அரசு முன்வருமா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இது மூலக் கேள்விக்குத் தொடர்புடைய கேள்வியாக இல்லையென்றாலும், உறுப்பினர் நல்லெண்ணத்துடன் இந்தக் கேள்வியைக் கேட்டிருப்பதால், இதுபற்றி அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் 218, திரு. சி. ஞானசேகரன் மற்றும் திரு. சி. கோபு, மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர்.

218—

அரியூர் கூட்டுறவு நூற்பாலை

***372—திரு. சி. ஞானசேகரன் :**

திரு. சி. கோபு:

மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் தாலுகா, அரியூர் கூட்டுறவு நூற்பாலை மூடப்பட்டதை அரசு அறியுமா?